கரம் நீட்டும் பாசத்திற்குரிய கட்சியாகவும், தவறு செய்யும் இடத்தில் தட்டிக்கேட்கும் ஆக்கப்பூர்வமான எதிர்க் கட்சியாகவும் இருப்போம். நண்பர்கள் காலையில் குறள் எல்லாம் சொன்னார்கள். குறள் எல்லோருக்கும் பொருந்தும். அந்தக் குறள் எங்களுக்கும் பொருந்தும் என்பதை நாங்கள் தெளிவாக உணர்ந்திருக்கிறோம்.

'' இடிப்பாரை இல்லாத ஏமரா மன்னன்
கெடுப்பா ரிலானுங் கெடும் ''

என்னும் வள்ளுவர் வாய்மொழிக்கேற்ப புரட்சித் தலைவரின் வழி நடக்கும் பொறுப்புள்ள புனித ஆட்சியை 'காக்கும் கரங்களாக' செயல்படுவோம் என்பதை இந்த சந்தர்ப்பத்தில் தெளிவுபடுத்த விரும்புகிறேன். அதுவே எம்.ஜி.ஆர். அவர்களின் இன்னுயிரைக்காக்க எல்லா நடவடிக்கைகளையும் மேற்கொண்ட அன்னை இந்திரா காந்தி அவர்களுக்கும் அவருடைய அருந்தவப் புதல்வர் ராஜீவ் காந்தி அவர்களுக்கும் நாங்கள் செலுத்தும் நன்றிக் கடனாக இருக்க முடியும். அந்தக் கடமையிலிருந்து நாங்கள் தவற மாட்டோம் என்பதை அன்னை இந்திராவின் பெயராலும் நம்முடைய இதயத் தலைவன், இளைய பாரதத்தின் எழுச்சி முரசம், உலகை வலம் வந்த ஒப்புயர்வற்ற தலைவன் ராஜீவ் காந்தியின் பெயராலும் சபதம் ஏற்கிறோம். வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்று, நாளை (13-7-1991) 9-30 மணிக்குப் பேரவை மீண்டும் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை 13-33 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

6. பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

18. திருவாளர்கள் குனால் இயந்திர தயாரிப்பாளர்கள் (தற்போது இந்திய பிரஸீசியன் பேரிங் தயாரிப்பாளர்கள் லிமிடெட்) நிறுவனத்தினர் செலுத்த வேண்டிய விற்பனை வரியை மூன்று ஆண்டு காலத்திற்கு தள்ளிவைத்தல் குறித்து வணிகவரிகள் மற்றும் சமய அறக்கட்டளைகள் துறையின் 20-12-1990-ஆம் நாளிட்ட 738 எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [1959-ம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

19. சென்னை, திருவாளர்கள் ரயான் டிரேடர்ஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தினால் 1-4-1988 முதல் 30-4-1988 வரை விற்பனை செய்யப்பட்ட செலோபேன் காகித விற்பனைக்கு விதிக்கப்பட்ட வரி வித்தியாசத்தினை தள்ளுபடி செய்வது குறித்து வணிகவரிகள் மற்றும் சமய அறக்கட்டளைகள் துறையின் 30-11-1990 ஆம் நாளிட்ட 694 எண் அரசாணையில் வெளியிடப் பட்ட அறிவிக்கை [1959-ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

20. 23-3-1987 முதல் 6-12-1988 வரை விற்பனை செய்யப் பட்ட பழைய மற்றும் தேய்மான ஆபரணங்களுக்காக கோரப் பட்டு வந்த 3 சதவீத வரியினை தள்ளுபடி செய்வது குறித்து வணிகவரிகள் மற்றும் சமய அறக்கட்டளைகள் துறையின் 30-11-1990-ஆம் நாளிட்ட 690 எண் அரசாணையில் வெளியிடப் பட்ட அறிவிக்கை [1959-ஆம் ஆண்டு தமிழ்நாடு பொதுவிற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.)

21. மோட்டார் வாகன பராமரிப்புத் துறையினால் ஏல மிடப்பட்ட பழுதடைந்த வாகனங்களின் விற்பனைக்காகச் செலுத்தப்பட வேண்டிய விற்பனை வரி மற்றும் மேல் வரியைத் தள்ளுபடி செய்வது குறித்து, வணிகவரிகள் மற்றும் சமய அறக் கட்டளைகள் துறையின் 13-11-1990-ஆம் நாளிட்ட 653-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1959-ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

22. தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு இந்தியாவில் தயாரிக்கப் படும் அயல்நாட்டு சாராவிகள் (தயாரிப்பு) விதிகளில் திருத்த மொன்று செய்வது குறித்து உள், மதுவிலக்கு மற்றும் ஆயத் தீர்வைத் துறையின் 16-11-1990 ஆம் நாளிட்ட 989 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1937 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937) 54 (3)பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது).

ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள், ஏனய தாள்கள்.

ஏதுமில்லை.